**தலைப்பு 116 - கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2013 ஆம் ஆண்டு**

---

இந்த அறிக்கை இரண்டு பகுதிகளை உள்ளடக்கியுள்ளது.

| | | |
|---|---|---|
| 1 ஆம் பகுதி | - | அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களின் கணக்குகள் தொடர்பான சுருக்கமான அறிக்கை |
| 2 ஆம் பகுதி | - | ஒவ்வொரு தலைப்புக்குமான விபரமான அறிக்கை |

## 1 ஆம் பகுதி

**கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களின் கணக்குகள் மீதான சுருக்கமான அறிக்கை**

---

### 1. அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள்

| தலைப்பு | திணைக்களத்தின் பெயர் |
|---|---|
| 298 | அளவைக் கூறுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களம் |
| 300 | உணவு ஆணையாளர் திணைக்களம் |
| 301 | கூட்டுறவுத்துறை அபிவிருத்தி திணைக்களம் |
| 302 | கூட்டுறவுத்துறை பணியாளர் ஆணைக்குழு |

### 2. கணக்குகள்

### 2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

**மொத்த ஏற்பாடு மற்றும் செலவினம்**

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள 04 திணைக்களங்களக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 2,046,654,000 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரை இதில் ரூபா 1,734,897,369 பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க அமைச்சினதும் ஒவ்வொரு திணைக்களங்களினதும் தேறிய நிதி ஏற்பாடுகளிலிருந்தான சேமிப்புக்கள் ரூபா 681,256 ஆகவும் ரூபா 249,456,693 ஆகவும் இருந்ததுடன் இடைவெளியின் அளவு தேறிய நிதி ஏற்பாட்டில் முறையே 1 சதவீதத்திற்கும் 18 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சினைக் கொண்டிருந்தது. விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| தலைப்பு இலக்கம் | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | சேமிப்புக்கள் தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக |
|---|---|---|---|---|
| | தேறிய நிதியேற்பாடு | உள்ளபடியான செலவினம் | சேமிப்புக்கள் | |
| | ரூபா | ரூபா | ரூபா | |
| 116 | 1,426,981,000 | 1,177,524,307 | 249,456,693 | 17 |
| 298 | 288,850,000 | 275,399,427 | 13,450,573 | 5 |
| 300 | 253,279,000 | 206,930,535 | 46,348,465 | 18 |
| 301 | 64,704,000 | 64,022,744 | 681,256 | 1 |
| 302 | 12,840,000 | 11,020,356 | 1,819,644 | 14 |
| மொத்தம் | 2,046,654,000 | 1,734,897,369 | 311,756,631 | 15 |

## 2.2 முற்பணக் கணக்குகள்

### 2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள 04 திணைக்களங்களுக்காக அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| விடய இல. | செலவினம் | | பெறுவனவு | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|
| | அதிகூடிய எல்லை | உள்ளபடியான வை | ஆகக்குறைந்த எல்லை | உள்ளபடியான வை | அதிகூடிய எல்லை | உள்ளபடியான வை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 11601 | 6,000,000 | 5,314,034 | 3,400,000 | 5,307,650 | 30,000,000 | 19,896,540 |
| 29801 | 9,000,000 | 2,225,958 | 3,500,000 | 4,966,404 | 35,000,000 | 18,469,703 |
| 30001 | 7,500,000 | 3,631,453 | 3,500,000 | 8,448,680 | 46,000,000 | 20,237,280 |
| 30101 | 6,000,000 | 3,382,630 | 2,000,000 | 2,820,779 | 21,000,000 | 12,112,984 |
| 30201 | 2,000,000 | 1,130,640 | 300,000 | 548,397 | 6,000,000 | 2,103,090 |

### 2.2.2 கலைத்தல் முற்பணக் கணக்கு

அமைச்சின் கீழுள்ள திணைக்களத்திற்குரிய 02 முற்பணக் கணக்குகள் 2003 சனவரி 01 ஆந் திகதியும் 2005 சனவரி 01 ஆந் திகதியும் கலைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| திணைக்களம் | | முற்பணக் கணக்கு செயற்பாடுகள் | கணக்கு இலக்கம் | கலைப்பதற்கு தீர்மானிக்கப்பட்ட திகதி | 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மீதி (ஆண்டுகள்) |
|---|---|---|---|---|---|
| உணவு ஆணையாளர் திணைக்களம் | (i) | சமையலறை மற்றும் வெதுப்பக முற்பணக் கணக்கு | 7000/0/0/0300/0002 | 2003 சனவரி 01 | 11 |
| | (ii) | உணவுப் பொருட்களைக் கொள்வனவு செய்தல் மற்றும் பகிர்ந்தளித்தல் முற்பணக் கணக்கு | 7000/0/0/0300/0003 | 2005 சனவரி 01 | 09 |

### 2.3 கட்டுநிதி மற்றும் பொது வைப்புக் கணக்குகள்

### 2.3.1 கட்டுநிதிக் கணக்குகள்

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள 04 திணைக்களங்களில் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கட்டுநிதி மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 68,518,728 ஆகும். விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| அமைச்சு / திணைக்களம் | கட்டுநிதிக் கணக்கின் இலக்கம் | 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மீதி |
|---|---|---|
| | | ரூபா |
| கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சு | 7002/0000/00/0046/0013/000 | 31,658,128 |
| அளவைக் கூறுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களம் | 7002/0000/00/0327/0013/000 | 4,271,896 |
| உணவு ஆணையாளர் திணைக்களம் | 7002/0000/00/0107/0013/001 | 32,027,841 |
| கூட்டுறவுத்துறை அபிவிருத்தி திணைக்களம் | 7002/0000/00/0018/0013/000 | 528,253 |
| கூட்டுறவுத்துறை பணியாளர் ஆணைக்குழு | 7002/0000/00/0156/0013/000 | 32,610 |
| மொத்தம் | | 68,518,728 |

### 2.3.2 பொது வைப்புக் கணக்குகள்

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள 03 திணைக்களங்களில் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு வைப்புக் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 224,625,816 ஆகும். விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| அமைச்சு / திணைக்களம் | வைப்புக் கணக்கின் இலக்கம் | 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மீதி |
|---|---|---|
| | | ரூபா |
| கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சு | 6000/0000/00/0015/0029/000 | 26,418,556 |
| அளவைக் கூறுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களம் | 6000/0000/00/0006/0069/000 | 44,445,215 |
| உணவு ஆணையாளர் திணைக்களம் | 6000/0000/00/0008/0013/000 | 76,673,230 |
| -மேற்படி- | 6000/0000/00/0015/0023/000 | 53,071,263 |
| -மேற்படி- | 6000/0000/00/0015/0155/000 | 8,755,872 |

| | | |
|---|---|---|
| கூட்டுறவுத்துறை அபிவிருத்தி திணைக்களம் | 6000/0000/00/0006/0080/000 | 8,604,605 |
| -மேற்படி- | 6000/0000/00/0015/0156/000 | 6,657,075 |
| மொத்தம் | | 224,625,816 |

## 2 ஆம் பகுதி

### ஒவ்வொரு தலைப்பிற்கும் உரிய விபரமான அறிக்கை

### 1. தலைப்பு – 116 – கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சு

### 1.1 கணக்காய்வின் நோக்கெல்லை

கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சின் 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள் பதிவேடுகள், ஆவணங்கள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2014 திசெம்பர் 02 ஆம் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

### 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய சட்டரீதியான ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பராமரித்துச் செல்லல், தயாரித்தல் மற்றும்

நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பராமரித்துச் செல்லல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சின் ஒதுக்கீட்டுக் கணக்கும், இணக்கக் கூற்றும் இங்கே (அ) முதல் (எ) வரையான அவதானிப்புக்கள் மற்றும் கீழே 1.4 தொடக்கம் 1.13 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

### (அ) கணக்குகளைச் சமர்ப்பித்தல்

அமைச்சின் கீழ் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார நிலைய முகாமைத்துவ நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தில் நிதிக்கூற்றுக்கள் கீழே காண்பிக்கப்பட்ட வருடங்களுக்காக 2014 ஒக்தோபர் 20 ஆந் திகதி வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| | பொருளாதார நிலையத்தின் பெயர் | சமர்ப்பிக்கப்படாத கணக்குகள் |
|---|---|---|
| (i) | மீகொடை | 2003 ஆரம்ப வருடம் முதல் 2011 ஆம் ஆண்டு வரை மற்றும் 2013 ஆம் ஆண்டு |
| (ii) | நாரஹேன்பிட்ட | 2008 ஆரம்ப வருடம் முதல் 2013 ஆம் ஆண்டு வரை |
| (iii) | ரத்மலான | 2009 ஆரம்ப வருடம் முதல் 2013 ஆம் ஆண்டு வரை |
| (iv) | வெலிசற | 2003 ஆரம்ப வருடம் முதல் 2011 ஆம் ஆண்டு வரை மற்றும் 2013 ஆம் ஆண்டு |
| (v) | வெயங்கொடை | 2007 ஆரம்ப வருடம் முதல் 2009 ஆம் ஆண்டு மற்றும் 2010 ஆம் ஆண்டு |
| (vi) | கெப்பட்டிபொல | 2001 ஆரம்ப வருடம் முதல் 2011 ஆம் ஆண்டு வரை மற்றும் 2013 ஆம் ஆண்டு |

| | | |
|---|---|---|
| (vii) | தம்புள்ள | 1999 ஆரம்ப வருடம் முதல் 2011 ஆம் ஆண்டு வரை |
| (viii) | நுவரெலிய | 2006 ஆரம்ப வருடம் முதல் 2013 ஆம் ஆண்டு வரை |
| (ix) | குறுந்துவத்த | 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகள் |
| (x) | கந்தெஹந்திய | 2004 ஆரம்ப வருடம் முதல் 2013 ஆம் ஆண்டு வரை |
| (xi) | தம்புத்தேகம | 2005 ஆரம்ப வருடம் முதல் 2013 ஆம் ஆண்டு வரை |
| (xii) | எம்பிலிபிட்டிய | 2003 ஆரம்ப வருடம் முதல் 2013 ஆம் ஆண்டு வரை |
| (xiii) | பிலியந்தல | 2010 ஆரம்ப வருடம் முதல் 2013 ஆம் ஆண்டு வரை |

(ஆ) கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

-----------------------------------------------------------------

பின்வரும் தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(i) கட்டிட வாடகைக்காக அமைச்சிற்கும் சதொச நிறுவனத்திற்குமிடையே ஏற்படுத்தப்பட்ட வாடகை உடன்படிக்கை மற்றும் கட்டிட வாடகை மதிப்பீட்டு அறிக்கை.

(ii) ரத்மலான பொருளாதார நிலையத்தில் வியாபார வளவை வாடகைக்கு வழங்கும் முறையான வாடகை உடன்படிக்கை மற்றும் விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட வியாபார வளவின் மதிப்பீட்டு அறிக்கை.

(iii) தம்புள்ள பொருளாதார நிலையத்தில் ரூபா 64,754,667 கூட்டுத்தொகையான 7 கணக்கு விடயங்களுக்குரிய தகவல்கள்.

(iv) ஒதுக்கீட்டுக் கணக்கில் நடைமுறையல்லா அசையும் அறிக்கையில் காண்பிக்கப்பட்ட ரூபா 705,117 கூட்டுத்தொகையான இயந்திர உபகரணங்களை கைதவிர்ப்பதற்குரிய விபரம்.

(இ) கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளித்தல்

--------------------------------------------------------------------------

பின்வரும் கணக்காய்வு ஐய வினாக்களுக்காக அமைச்சினால் பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை.

(i) அமைச்சிற்கு மீளாய்வாண்டின் போது சமர்ப்பிக்கப்பட்ட 06 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு 2014 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் பதிலளிக்கப்பட்டிராததுடன், அந்த ஐயவினாக்களுக்குரிய கணிப்பீடு செய்யக்கூடிய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 24,440,926 ஆகும்.

(ii) மீளாய்வாண்டின் போது தம்புள்ள பொருளாதார நிலையம் தொடர்பான 04 கணக்காய்வு ஐயவினாக்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும், 2014 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் அதற்காக பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. அந்த ஐயவினாக்களுக்குரிய கணிப்பீடு செய்யக்கூடிய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 10,226,725 ஆகும்.

(ஈ) மிகைச் செலவினம்

------------------------------

116-1-3-2201 ஆம் செலவின விடயத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடு ரூபா 660,000 இனால் மிகைத்து பயன்படுத்தப்பட்டிருந்தது.

(உ) பாதீட்டு முரண்கள்

------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 10 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 106,625,000 தொகையான மொத்த தேறிய ஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தன.

(ii) 15 செலவின விடயங்களுக்காக மிகையான நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டமை காரணமாக நிதியேற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்புக்கள் அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய ஏற்பாட்டில் 25 சதவீதம் முதல் 90 சதவீதம் வரையான அளவைக் கொண்டிருந்தது.

(ஊ) பொது வைப்புக் கணக்கு

------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2011 யூன் 03 ஆந் திகதிய 218/2011 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் படி பழைய பொது வைப்புக் கணக்கில் ரூபா 5,240,956 தொகையான மீதியில் 2011 ஆகஸ்ட் 26 ஆந் திகதி மேற்கூறப்பட்ட சுற்றறிக்கையின் 02 ஆம் பந்திக்கு முரணாக அரசாங்க கணக்குகள் திணைக்களத்தின் அங்கீகாரம்

பெறப்படாமல் 6000/0/0/15 என்ற பொது வைப்புக் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்தது. அந்த வைப்புக்களின் காலம் 2 வருடங்களை விஞ்சியிருந்த போதிலும் 2014 ஏப்ரல் 23 ஆந் திகதி வரையிலும் நிதிப் பிரமாணம் 571 இன் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2009 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் பெறுமதிசேர் வரி மற்றும் நிறுத்தி வைத்தல் வரியாக ரூபா 1,360,220 கூட்டுத்தொகையானது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. அந்த மொத்தப் பணத்தையும் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பப்படாது 2013 ஏப்ரல் 01 ஆந் திகதி அதில் ரூபா 209,847 தொகை விஷேட பொருளாதார நிலையங்களின் பராமரிப்பு நிதியக் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்தது. எஞ்சிய ரூபா 1,150,373 தொகை 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(iii) 2012 திசெம்பர் 26 ஆந் திகதி சர்வதேச தொழிலாளர் அமைப்பிலிருந்து கிடைத்த ரூபா 800,160 தொகை பொது வைப்பாக கணக்கீடு செய்யப்பட்டு 2013 சனவரி 01 ஆந் திகதி வரையிலும் அந்த மீதி ரூபா 379,440 ஆக இருந்தது. மீளாய்வாண்டின் போது அதில் ரூபா 24,800 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் அம் மீதி ரூபா 354,640 ஆக இருந்தது. அந்த வைப்புக்களுக்காக 2 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்த போதிலும் உரிய செயற்பாட்டிற்காக பயன்படுத்துவதற்கோ அல்லது நிதிப்பிரமாணம் 571 இன் படி நடவடிக்கையோ எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்று

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 11601 ஆம் விடய இலக்க முற்பணக் கணக்கு தொடர்பாக 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு இணக்கக்கூற்றின் படி நிலுவையாக இருந்த கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 347,902 ஆக இருந்ததுடன் அந்த நிலுவையாக மீதிகளை அறவிடுவதற்கு அமைச்சு தவறியிருந்தது.

(ii) இடமாற்றலாகிச் சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து 04 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக நிலவி வரும் கொண்டுவரப்படுகின்ற ரூபா 131,200 தொகையான கடன் மீதிகள் தொடர்பாக 2004 ஒக்தோபர் 11 ஆந் திகதிய 118 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் படி நடவடிக்கை எடுத்து அந்த மீதியை அறவிடுவதற்கு அமைச்சு தவறியிருந்தது.

(iii) ஓய்வுபெற்ற உத்தியோகத்தரிடமிருந்து அறவிடவேண்டிய ரூபா 4,262 தொகையான கடன் மீதியொன்று, அந்த உத்தியோகத்தர் ஓய்வுபெற்றுச் சென்று 8 வருட காலங்கள் கடந்திருந்த போதும் அந்த உத்தியோகத்தரிடமிருந்து அக்கடன் மீதியை அறவிடுவதற்கு தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.2.4 மற்றும் 4.2.5 ஆம் பிரிவுகளின் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) சேவையை விட்டுச் சென்ற இரண்டு உத்தியோகத்தர்களிடமிருந்து 04 வருடங்கள் மற்றும் 11 வருடங்கள் முதல் கொண்டுவரப்படுகின்ற ரூபா 62,776 கூட்டுத்தொகையான கடன்மீதி தொடர்பாக தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.5 மற்றும் 4.6 ஆம் பிரிவுகளின் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(v) மரணமடைந்த உத்தியோகத்தரிடமிருந்து ரூபா 149,665 தொகையான கடன் மீதி 16 மாதங்கள் முதல் கொண்டுவரப்பட்டிருந்தும் தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் படி நடவடிக்கை எடுத்து அக்கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(vi) 2011 திசெம்பர் 30 ஆந் திகதி 155 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தியின் படி, அரசாங்க ஊழியருக்குச் செலுத்தக்கூடிய ஆகக்கூடிய இடர் கடனின் அளவு ரூபா 250,000 இனை விஞ்ச முடியாத போதிலும், அந்த எல்லையினை விஞ்சி மூன்று உத்தியோகத்தர்களுக்கு ரூபா 445,750 கூட்டுத்தொகையான இடர் கடன் செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறு மேலதிகமாகச் செலுத்தப்பட்ட இடர் கடனை 2014 மார்ச் 25 ஆந் திகதி வரையிலும் அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 1.4.1 வருடாந்த கொள்வனவுத் திட்டம்

2006 மார்ச் 24 ஆந் திகதிய 28 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின்படி மீளாய்வாண்டிற்குரிய வருடாந்த கொள்வனவுத் திட்டம் 2014 நவம்பர் 26 ஆந் திகதி வரையிலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.4.2 உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு தாபிக்கப்பட்டிருந்த போதிலும் போதியளவிலான உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. 2013 ஆம் ஆண்டின் போது புலனாய்வு நடவடிக்கைகள் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

## 1.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(ஆ) 2009 திசெம்பர் 09 ஆந் திகதிய பீஎப்/எப்எஸ்/பொ.மெ/01 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் 441 இன் 3.6 இன்படி, 2014 மார்ச் 15 ஆந் திகதிக்கு முன்னர் பொருள் மெய்மையாய்வு அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்ட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்குரிய பொருள் மெய்யமையாய்வு அறிக்கை 2014 யூன் 16 ஆந் திகதியே கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2011, 2012 மற்றும் 2013 போன்ற மூன்று வருடங்களிலும் அமைச்சரின் அலுவலகம், பிரதி அமைச்சரின் அலுவலகம் மற்றும் மொழிபெயர்ப்பு பிரிவு போன்றவற்றில் வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) 2013 ஆம் ஆண்டிற்குரிய மெய்மையாய்வு அறிக்கைகளில் சுட்டிக்காண்பிக்கப்பட்ட பாற்றாக்குறைகள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.6 இணக்கமின்மைகள்

### சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலிவற்றுடனான இணக்கமின்மை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களிற்கான தொடர்பு | இணக்கமின்மை |
| --- | --- |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | |
| நிதிப்பிரமாணம் 135 முதல் 139 வரை | தொடர்புடைய நிதிப்பிரமாணம் ஏற்பாடுகளுக்கு இணங்க கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவை | |
| 2.4 வழிகாட்டி | தம்புளை பொருளாதார நிலையத்திற்கு வழங்கல் மற்றும் சேவைகளைப் பெற்றுக்கொள்ளும் போது கொள்வனவுக் குழு மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் மூலம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (இ) பொதுநிருவாகச் சுற்றறிக்கை | |
| 2005 மார்ச் 31 ஆந் திகதிய 08/2005 ஆம் இலக்க சுற்றறிக்கை | தம்புள்ள பொருளாதார நிலையத்தின் உத்தியோகத்தர்களுக்கு ஆதனக் கடன் வழங்குதல் வங்கியின் ஊடாக மாத்திரம் மேற்கொள்ள வேண்டிய போதிலும், அதற்கு இணங்காமல் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஈ) அரசாங்க நிதிச் சுற்றிக்கை | |
| (i) 2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பீஎப் 423 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 3.3(ஆ) பந்தி | ஏதாவது நிதியமொன்றை நடாத்திச் செல்வதற்கு பொதுவான காரணங்கள் இருக்குமாயின் அவ்வாறான நிதியம் பாராளுமன்ற அதிகாரச்சட்டத்தின் மூலம் சட்டமாக்குவதற்கு ஏற்ற வகையில் காரணம் காண்பிக்கப்பட்டு அரசாங்க நிதித் திணைக்களத்திற்கு |

அறிக்கையிடப்பட வேண்டிய போதிலும், தம்புள்ள மற்றும் கெப்பட்டிபொல பொருளாதார நிலையங்களில் முகாமைத்துவ நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் தொடர்பாக அதற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| | |
|---|---|
| (ii) 4 ஆம் பந்தி | நிதியத்தின் நோக்கங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்ட வருடாந்த பாதீடு அமைச்சரின் அங்கீகாரத்துடன் தேசிய பாதீட்டு பணிப்பாளர் நாயகத்திற்கும் அரசாங்க நிதிப் பணிப்பாளர் நாயகத்திற்கும் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், தம்புள்ள மற்றும் கெப்பட்டிபொல பொருளாதார நிலையங்களில் முகாமைத்துவ நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் தொடர்பாக அதற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) 4.2 (ஆ) ஆம் பந்தி | முகாமைத்துவ நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்குக் கிடைக்கின்ற சகல பெறுவனவுகளுக்காகவும் உத்தியோகபூர்வ பற்றுச்சீட்டு விநியோகிப்பதற்கு தம்புள்ள, கெப்பிட்டிபொல மற்றும் மீகொடை பொருளாதார நிலையங்கள் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (iv) 4.2 (ஈ) ஆம் பந்தி | பேணப்படுகின்ற வங்கிக் கணக்கு மற்றும் ஏடுகளை சட்டரீதியாக இணக்கஞ் செய்து அதன் செயல்முன்னேற்றம் அரசாங்க நிதிப் பணிப்பாளர் நாயகத்திற்குச் சமர்ப்பிப்பதற்கு தம்புள்ள, கெப்பட்டி பொல மற்றும் மீகொடை பொருளாதார நிலையங்கள் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

## 1.7 செயலாற்றல்

2013 இன் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின்படி, அமைச்சின் செயல்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) அனுராதபுரம் கூட்டுறவு வைத்தியசாலை நிர்மாணம்

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2010 ஏப்ரல் 30 ஆந் திகதிய 1651/20 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் அமைச்சிற்கு கையளிக்கப்பட்ட

செயற்பாடுகளுக்கிடையே மஹிந்த சிந்தன எதிர்கால நோக்கு மற்றும் அரசாங்கத்தின் மூலம் அமுல்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட தேசியக் கொள்கையின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட அமைச்சின் விடயங்களுக்கும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களின் விடயங்களுக்கும் உரிய தேசிய கொள்கை அமுல்படுத்தப்பட வேண்டும். அதற்கு இணங்காத அனுராதபுரம் கூட்டுறவு வைத்தியசாலையின் 2 ஆவது மாடியை நவீனமயப்படுத்துவதற்காக அரசாங்க கொள்வனவு வழிகாட்டிகளுக்கு புறம்பாகவும் உடன்படிக்கையின்றியும் நிர்மாண நிறுவனமொன்றிற்கு வழங்கப்பட்டிருந்தது.

(ii) கோவையின் பிரகாரம் மேற்கூறப்பட்ட கூட்டுறவு வைத்தியசாலைக் கட்டிடம் ரூபா 24 மில்லியன் மதிப்பீட்டின் கீழ் 4 மாடிகளுக்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன் 2012 ஆம் ஆண்டின் போது அதில் 2 ஆவது மாடி நிர்மாணத்திற்காக ரூபா 7 மில்லியன் அந்த நிர்மாண நிறுவனத்திற்கு செலுத்தப்பட்டிருந்த போதிலும் அந்தப் பணம் உரிய செயற்பாடுகளில் ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) விலச்சி நெல் ஆலை நிர்மாணம்

2012 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் படி ரூபா 5 மில்லியன் தொகையில் விலச்சி நெல் ஆலையை நிர்மாணிப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அதன்படி அந்த நிர்மாணத்தில் நலிவுகள் காணப்பட்டதுடன் அது தொடர்பாக ஒப்பந்தக்காரருக்கும் மதியுரைக் கம்பனிக்கும் எதிராக சட்டரீதியான நடவடிக்கைகளை எடுக்குமாறு வடமத்திய மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் கோரிக்கை விடுத்திருந்தும் அது தொடர்பாக கவனத்தில் கொள்ளாமல் மற்றும் 2013 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்படாதிருந்த போதிலும் 2013 ஆம் ஆண்டின் போதும் ரூபா 8,953,571 கூட்டுத்தொகையானது அந்த செயற்திட்டத்திற்காகச் செலவிடப்பட்டிருந்தது.

## 1.8 வங்கிக் கணக்கு செயற்பாடுகளில் குறைபாடு

2013 திசெம்பர் மாதத்திற்காகத் தயாரிக்கப்பட்ட வங்கிக் கணக்கிணக்கக்கூற்றின் பிரகாரம் வழங்கப்பட்டு 06 மாதங்களைக் கடந்திருந்தும் கொடுப்பனவிற்காகச் சமர்ப்பிக்கப்படாத ரூபா 20,126 பெறுமதியான காசோலை தொடர்பாக நிதிப்பிரமாணம் 396(இ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**1.9 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

---

அமைச்சால் மேற்கொள்ளப்பட்ட சில கொடுக்கல் வாங்கல்கள் சர்ச்சைக்குரிய வடிவிலானதாக இருந்தன. தெரிவுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட அவ்வாறான கொடுக்கல் வாங்கல்கள் சிலவற்றின் விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

(அ) அரசாங்க நிறுவனத்திற்குச் சொந்தமான காணியை அமைச்சிற்குக் கையேற்காமல் அதில் அம்பாறை பொருளாதார நிலையம் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் அதற்கான ரூபா 32,952,951 தொகையான மதிப்பீடு அமைச்சுச் செயலாளரினால் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. இந்த நிர்மாணத்திற்காக ஒப்பந்தக்காரரையும் மதியுரைச் சேவையையும் பெற்றுக்கொள்ளும் போது அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவைகளுக்குப் புறம்பாக மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன்படி போட்டியாளரின் கூறுவிலைகள் கோரப்படாமல் நிர்மாண நடவடிக்கைகள் அரசிற்கு சொந்தமான நிர்மாணம் மற்றும் பொறியியல் கம்பனிக்கும் ஆலோசனை நடவடிக்கைகள் தனியார் ஆலோசனை நிறுவனத்திற்கும் ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது. இவ்வாறு கையளிக்கப்பட்ட ஒப்பந்தம் தொடர்பாக எழுத்துமூல உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. 193.65 பேர்ச் அளவான அரசாங்கத்திற்குரியதாகக் காணப்பட்ட காணியில் தாபிக்கப்பட்டிருந்த கட்டிடம் ரூபா 395,570 தொகை செலவிடப்பட்டு உடைத்து அகற்றப்பட்டு சதொச வளவில் பொருளாதார நிலையம் நிர்மாணிக்கப்பட்டிருந்தது.

(ஆ) அமைச்சின் கீழுள்ள இரத்மலான மற்றும் நாரஹேன்பிட்ட பொருளாதார நிலையங்களை முகாமை செய்வதற்காக முகாமைத்துவப் பொறுப்புக் குழுவொன்று தாபிக்கப்பட்டிருக்கவில்லை. அந்நிலையங்களின் வருமானம் அரசாங்கத்தின் வருமானத்தில் செலவு வைக்கப்படாதிருந்ததுடன் அந்த நிலையங்களுக்குரிய நிதிக்கூற்றுக்கள் 2014 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையிலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2012 ஆம் ஆண்டின் போது பொசன் பண்டிகைக்காக அன்னதானமொன்றுக்கு ரூபா 51,000 பெறுமதியான 1,016 கிலோகிராம் பெரிய வெங்காயம் வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறே மீளாய்வாண்டின் போது நடாத்தப்பட்டிருந்த கூட்டங்களுக்கு சமூகமளிக்காத 21 பேர்களுக்கு ரூபா 11,000 உபசரிப்புச் செலவினமும் முகாமைத்துவ பொறுப்பிலிருந்து செலவிடப்பட்டிருந்தது.

## 1.10 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் முறையற்றதாக இருந்தமை அவதானிக்கப்பட்ட சில சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### (அ) கொள்வனவு வழிகாட்டி நடைமுறைகளிலிருந்து விலகியமை

கிளிநொச்சி பொருளாதார நிலையத்தின் நிர்மாண நடவடிக்கைகளுக்காக ரூபா 80 மில்லியன் மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டிருந்தது. நிர்மாண நடவடிக்கைகள், திட்டமிடல் மற்றும் அளவிடைப்பத்திரங்களைத் தயாரித்தல் பணிகள் அமைச்சின் கொள்கைத் தீர்மானத்தின் படி அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளுக்கு புறம்பாக இரண்டு தனியார் கம்பனிகளுக்குக் கையளிக்கப்பட்டிருந்தன. இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

(i) உரிய இரண்டு கம்பனிகளுக்கும் அச்செயற்பாடுகளை நிறைவேற்றும் பணிகள் கையளிக்கப்பட்டிருந்த போதிலும் அதற்காக உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.

(ii) ஒப்பந்தக்காரரால் நிர்மாண நடவடிக்கைகள் முறையாக நிறைவேற்றப்படாத விடத்து கொள்வனவு விடயங்களை பாதுகாத்துக் கொள்ளக்கூடிய வகையில் செயலாற்றல் பாதுகாப்பு பிணையொன்று பெறப்பட்டிருக்கவில்லை.

(iii) ஒப்பந்தத்தின் குறைபாடுகளுக்கான பொறுப்பளிப்புக் கால எல்லை முடிவடையும் வரை ஒப்பந்தக்காரருக்கு மேற்கொள்ளப்படுகின்ற கொடுப்பனவுகளில் ஒரு தொகை நிறுத்தி வைக்கப்பட்டு கொடுப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(iv) 6 ஏக்கர் 140 பேர்ச் அளவான மேற்குறிப்பிட்ட நிர்மாணங்கள் மேற்கொள்ளப்பட்ட நிலம் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் கையேற்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் அடிக்கல் வைத்து $2^1/_2$ வருடங்கள் கடந்திருந்த போதிலும் நிர்மாண நடவடிக்கைகள் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை

(ஆ) சேவையொன்றைப் பெற்றுக்கொள்ளாது சம்பளம் மற்றும் வேதனங்களை செலுத்துதல்

--------------------------------------------------------------------------------------------------------------------------

தம்புள்ள பொருளாதார நிலையத்தில் பாதுகாப்புச் சேவை தனியார் பாதுகாப்புக் கம்பனியொன்றுக்கு கையளிக்கப்பட்டிருந்த போதும், நிலையத்தினால் இரு காவலாளிகளுக்கு 2012 ஆம் ஆண்டின் போது சம்பளம் மற்றும் வேதனங்களாக ரூபா 532,430 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(இ) அதிகாரபலமின்றிய கொடுக்கல் வாங்கல்கள்

---------------------------------------------------------------------------

சட்டமா அதிபர் திணைக்களத்தின் 2006 மே 08 ஆந் திகதிய 5/2/1/10/3 ஆம் இலக்க கடிதத்தின்படி நம்பிக்கைப் பொறுப்பின் கூட்டத்திற்காக பங்குபற்றியதற்கான படிகள் செலுத்துவதற்கு முறையான அங்கீகாரமொன்று பெறவேண்டியிருந்த போதிலும், முறையான அங்கீகாரமொன்று பெற்றுக்கொள்ளப்படாது மீளாய்வாண்டின் போது தம்புள்ள பொருளாதார நிலையத்தில் நடாத்தப்பட்ட கூட்டங்களுக்காக நம்பிக்கைப் பொறுப்பு அங்கத்தவர்களுக்கு ரூபா 368,550 கூட்டுத்தொகையான படிகள் செலுத்தப்பட்டிருந்தன.

**1.11 நட்டங்களும் இழப்புகளும்**

**-------------------------------------------**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட நட்டம் மற்றும் இழப்புக்கள் தொடர்பான அவதானிப்புகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) அமைச்சிற்குச் சொந்தமான வாகனமொன்று விபத்திற்குட்டமையால் ரூபா 408,546 நட்டம் ஏற்பட்டிருந்தது. அந்த நட்டத்தில் ரூபா 393,676 தொகை காப்புறுதி நிறுவனத்திடமிருந்து கிடைத்திருந்தது. அதன்படி ரூபா 14,744 தொகையை பொறுப்புவாய்ந்தவரிடமிருந்து அல்லது அவ்வாறில்லையாயின் பதிவழிப்பதற்கு 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. விபத்து தொடர்பாக நிதிப்பிரமாணம் 103 மற்றும் 104 இன் படி நடவடிக்கை எடுத்து ஆரம்ப அறிக்கை மற்றும் பூரண அறிக்கை கணக்கீட்டு உத்தியோகத்தருக்கும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அரசாங்க கூட்டுத்தாபனத்திற்கு 2013 பெப்ரவரி 08 ஆந் திகதி தற்காலிக அடிப்படையில் கையளிக்கப்பட்ட வாகனமொன்று 2013 பெப்பரவரி 13 ஆந் திகதி விபத்திற்குள்ளாகியிருந்தது. அதன் பழுதுபார்த்தல்கள் வாகனத்தின்

முகவர் நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்டு அதற்காக ரூபா 724,352 தொகையும் மேலும் தனியார் நிறுவனமொன்றிற்கு ரூபா 287,100 தொகையும் ஆக ரூபா 1,011,452 கூட்டுத்தொகை செலவில் பழுதுபார்க்கப்பட்டிருந்தது. அதற்காக காப்புறுதி நிறுவனத்திடமிருந்து ரூபா 81,600 தொகை கிடைத்திருந்தது. இது தொடர்பாக நிதிப்பிரமாணம் 104(4) இன் படி இறுதி அறிக்கை 2014 ஒக்தோபர் 31 ஆந் திகதி வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. நட்ட இழப்பில் ரூபா 929,852 தொகை தொடர்பாக பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கோ அல்லது நட்ட இழப்பைப் பதிவழிப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2013 யூலை 31 ஆந் திகதி அமைச்சுக் கட்டிடத்தில் ஏற்பட்ட தீ விபத்து தொடர்பாக அறிக்கையிடுவதற்காக மேலதிக செயலாளரின் (நிருவாகம்) 2013 ஆகஸ்ட் 08 மற்றும் 2013 ஆகஸ்ட் 12 ஆந் திகதிய சீஜரீ/2/1/சதொச நட்டஇழப்பு ஆம் இலக்க கடிதத்தின் மூலம் நி.பி. 104(1) இன் கீழ் உள்ளகப் பரிசோதனையொன்றுக்கு அமைச்சு மட்டத்தில் பரிசோதனைச் சபை நியமிக்கப்பட்டிருந்தது. உள்ளக பரிசோதனை அறிக்கை 2014 ஏப்ரல் 26 ஆந் திகதி வரையிலும் சமர்ப்பிக்காமை மற்றும் அமைச்சு மட்டத்தில் பரிசோதனை அறிக்கை பூர்த்தியடையாமையின் காரணமாக தீயினால் ஏற்பட்ட நட்டமாகக் காண்பிக்கப்பட்ட ரூபா 677,047 பெறுமதியின் சரியான தன்மையை உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 1.12 முகாமைத்துவ நலிவுகள்

-----------------------------------------

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) இறத்மலானை பொருளாதார நிலையம்

-----------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) இறத்மாலனை பொருளாதார நிலையத்தின் வளவினை வாடகைக்கு வழங்கும் போது ஆரம்பப் பணம் ஒரே தடவையில் வைப்புச் செய்யப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செயற்படாது ஆரம்பப் பணத்தில் ஒரு பகுதி மாத்திரம் அறவிடப்பட்ட 5 சந்தர்ப்பங்கள் காணப்பட்டன.

(ii) இறத்மலானை பொருளாதார நிலையத்திலுள்ள 128 கடைகளில் 19 கடைகளிலிருந்து எவ்வித வாடகைப் பணமும்

அறவிடப்படாதிருந்ததுடன் அதில் 2 கடைகள் வாடகைக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை.

(iii) 2009 ஆம் ஆண்டு முதல் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரை கிடைக்கவேண்டிய கடை வாடகையின் கூட்டுத்தொகை ரூபா 11,699,990 ஆக இருந்ததுடன் வாடகையான ரூபா 4,688,750 தொகை இனங்காணப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தம்புள்ள பொருளாதார நிலையம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 1984 யூன் 08 ஆந் திகதிய 300/14 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானியின் மூலம் நகர மற்றும் நிர்மாண அமைச்சிற்கு கையேற்கப்பட்ட காணியில் 1999 ஆம் ஆண்டின் போது ரூபா 115,000,000 தொகை செலவில் நிலையம் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் உரிய காணி முகாமைத்துவப் பொறுப்பிற்கு கையேற்பதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மீளாய்வாண்டின் போது பாதுகாப்புச் சேவை வழங்குவதற்காக பாதுகாப்பு சேவைக் கம்பனியொன்றுக்கு சேவை வழங்கப்படாத 76 நாட்களுக்காக ரூபா 56,400 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(iii) முகாமைத்துவப் பொறுப்பில் 2012 ஆம் ஆண்டின் இறுதியளவில் சேமிப்புக் கணக்கில் ரூபா 4,159,567 தொகையான மீதி காணப்பட்டதுடன் அதனை வினைத்திறனான முதலீட்டு வழிகளில் ஈடுபடுத்துவதற்கு கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

### 1.13 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 24 | 17 | 07 |
| (ii) | மூன்றாம் நிலை | 05 | 02 | 03 |
| (iii) | இரண்டாம் நிலை | 269 | 177 | 92 |
| (iv) | ஆரம்ப நிலை | 49 | 39 | 10 |
| (v) | ஏனையவை (அமைய/தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை) | 06 | 04 | 02 |
| | மொத்தம் | 353 | 239 | 114 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றன.

அமைச்சிலிருந்து வேறு நிறுவனங்களுக்கு நியமிக்கப்படாதிருந்தமை காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அமைச்சின் கீழுள்ள ஏனைய 5 நிறுவனங்களிலிருந்தும் பெறப்பட்ட தகவல்களின் படி மொத்தமாக 103 பேர் நியமிக்கப்பட்டிருந்தமை வெளிப்படுத்தப்பட்டது.

## 2. தலைப்பு 298 – அளவைக் கூறுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களம்

### 2.1 கணக்காய்வின் நோக்கெல்லை

அளவைக் கூறுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2014 ஆகஸ்ட் 01 ஆம் திகதி திணைக்களத் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் கணக்கிணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளினதும் கணக்கிணக்கக் கூற்றுக்களினதும் மீளாய்வு மற்றும் கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவு செவ்வை பார்த்தலின் அடிப்படையிலும் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும்

எனக்குக் கிடைப்பதற்குள்ள பதவியணியினர், ஏனைய மூலவளங்கள், நேரம் என்பவற்றிற்கமைய இயலுமானளவு விரிவானதோர் கணக்காய்வை உள்ளடக்கக் கூடியவாறு தயாரிக்கப்பட்டதாகும்.

**2.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் சம்பந்தமாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்று என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பினது 148, 149, 150, 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு ஏற்ப பேணிவருதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாக சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான தவறான கூற்றுக்களைக் கொண்டிராத கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல், நியாயபூர்வமாகச் சமர்ப்பிக்கப்படுதலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாட்டைத் திட்டமிடலும், அமுல்படுத்தலும் பேணிவருதலும் இப்பொறுப்பில் உள்ளடங்கும்.

**2.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்**

2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் அளவைக் கூறுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இந்த அறிக்கையின் (அ) முதல் (ஈ) வரையிலுமான பொதுவான அவதானிப்புக்கள் மற்றும் கீழேயுள்ள 2.4 முதல் 2.7 வரையிலான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமானதாக தயாரிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**(அ) பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை**

திணைக்களத்தினால் 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நிலையான சொத்துப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) பாதீட்டு முரண்பாடு**

இரண்டு செலவின விடயங்களுக்காக மிகையேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தமை காரணமாக நிதியேற்பாட்டை பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய

நிதியேற்பாட்டில் 19 சதவீதத்திற்கும் 87 சதவீதத்திற்குமிடையிலான வீச்சினைக் கொண்டிருந்தது.

**(இ) பொது வைப்புக் கணக்கு**

---

2 வருடங்களை விஞ்சிய ரூபா 44,445,215 கூட்டுத்தொகையான வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான கணக்கிணக்கக்கூற்று**

---

29801 ஆம் இலக்க முற்பணக் கணக்குகள் தொடர்பான 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான கணக்கிணக்கக் கூற்றின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 151,665 ஆக இருந்ததுடன் அந்த நிலுவை மீதியை அறவிடுவதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

## 2.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

---

**உள்ளகக் கணக்காய்வு**

---

திணைக்களத்தினால் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு ஸ்தாபிக்கப்பட்டிராததுடன் வரிசை அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

## 2.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

---

**வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்**

---

2010 திசெம்பர் 17 ஆந் திகதிய பீஎப்/மெய்மையாய்வுச் சபை/01 ஆம் இலக்க அரசாங்க நிதிப்பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தினால் திருத்தப்பட்ட 2009 திசெம்பர் 09 ஆந் திகதிய 441 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் 2013 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு அந்த அறிக்கை 2014 மார்ச் 31 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் திணைக்களத்தினால் வருடாந்த பொருள் மெய்மையாய்வு அறிக்கை 2014 யூன் 09 ஆந் திகதி வரையிலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.6 இணக்கமின்மைகள்

### சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றுடனான இணக்கமின்மைகள்

1997 பெப்ரவரி 03 ஆந் திகதிய 06/97 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றுநிருபத்தின் பிரகாரம் பதவியொன்றின் பதில் கடமைக் காலம் ஆகக்கூடியது 03 மாதங்களிற்கு வரையறுக்கப்பட்டிருந்த போதிலும் அதனைக் கவனத்தில் கொள்ளாது 2009 மே 05 ஆந் திகதி தொடக்கம் 2013 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் நிரப்பப்படாத வெற்றிடமான பதவியொன்றில் பதில் கடமை அடிப்படையில் வேலைகளைக் கவனிப்பதற்காக பணிப்பாளர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தார்.

## 2.7 மனிதவள முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளவாறான பதவியணியினரும்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பதவியணியினர் எண்ணிக்கை தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| (i) சிரேஷ்ட நிலை | 16 | 12 | 04 |
| (ii) மூன்றாம் நிலை | 30 | 02 | 28 |
| (iii) இரண்டாம் நிலை | 202 | 115 | 87 |
| (iv) ஆரம்ப நிலை | 95 | 63 | 32 |
| மொத்தம் | 343 | 192 | 151 |

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

திணைக்களத்தில் காணப்பட்ட 151 வெற்றிடங்களை நிரப்புவதற்கு மீளாய்வாண்டின் இறுதிவரை திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 3. தலைப்பு 300 – உணவு ஆணையாளர் திணைக்களம்

### 3.1 கணக்காய்வின் நோக்கெல்லை

உணவு ஆணையாளர் திணைக்களத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2014 நவம்பர் 28 ஆம் திகதி திணைக்களத் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளினதும் இணக்கக் கூற்றுக்களினதும் மீளாய்வு மற்றும் கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவு செவ்வை பார்த்தலின் அடிப்படையிலும் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்குக் கிடைப்பதற்குள்ள பதவியணியினர், ஏனைய மூலவளங்கள், நேரம் என்பவற்றிற்கமைய இயலுமானளவு விரிவானதோர் கணக்காய்வை உள்ளடக்கக் கூடியவாறு தயாரிக்கப்பட்டதாகும்.

### 3.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் சம்பந்தமாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்று என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பினது 148, 149, 150, 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு ஏற்ப பேணிவருதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாக சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான தவறான கூற்றுக்களைக் கொண்டிராத கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல், நியாயபூர்வமாகச் சமர்ப்பிக்கப்படுதலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாட்டைத் திட்டமிடலும், அமுல்படுத்தலும் பேணிவருதலும் இப்பொறுப்பில் உள்ளடங்கும்.

### 3.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் உணவு ஆணையாளர் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக்

கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இந்த அறிக்கையின் (அ) முதல் (ஈ) வரையிலுமான பொதுவான அவதானிப்புக்கள் மற்றும் கீழேயுள்ள 3.4 முதல் 3.13 வரையிலான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமானதாக தயாரிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(அ) பாதீட்டு முரண்கள்

-------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 09 செலவின விடயங்களுக்காக மிகை நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டமை காரணமாக நிதியேற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய ஏற்பாட்டில் 20 சதவீதம் முதல் 88 சதவீதம் வரையான அளவைக் கொண்டிருந்தது.

(ii) திறைசேரி கணனி அச்சீட்டுக் குறிப்பு மற்றும் திணைக்கள ஏடுகளுக்கும் இடையே செலவின விடயமொன்றில் ரூபா 4,279 தொகையான வேறுபாடு காணப்பட்டது.

(ஆ) பொது வைப்புக் கணக்கு

--------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2 வருடங்களை விஞ்சிய ரூபா 43,887,570 கூட்டுத்தொகையான 200 வைப்புக்கள் தொடர்பில் நிதிப் பிரமாணம் 571 இன் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) திணைக்களத்தின் புத்தகங்களின் படி 6000/0000/00/0015/0155/000 ஆம் இலக்க பொது வைப்புக் கணக்கில் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் காணப்பட்ட மீதி ரூபா 8,755,872 ஆக இருந்த போதிலும் வைப்புப் பதிவேட்டின் படி அது ரூபா 2,137,047 ஆக இருந்தது. அதன் படி வைப்புப் பதிவேடு தினந்தோறும் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

----------------------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 30001 ஆம் விடய இலக்க முற்பணக் கணக்கு தொடர்பாக 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு இணக்கக்கூற்றின் படி நிலுவையாக இருந்த கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 2,976,004 இனை அறவிடுவதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

(ii) அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கில் திணைக்களப் புத்தகங்களின் பிரகாரம் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மீதி ரூபா 19,461,366 ஆக இருந்த போதிலும், திறைசேரிப் புத்தகங்களின் பிரகாரம் அந்த மீதி ரூபா 19,144,525 ஆக இருந்தது. அதன்படி ரூபா 316,841 வேறுபாடு நிதிப்பிரமாணம் 427 இன் படி இணக்கஞ் செய்யப்பட்டிருக்கவில்லை.

(iii) இணக்கக்கூற்றின் படி 2013 ஆம் ஆண்டின் இறுதி மீதி ரூபா 19,461,365 ஆக இருந்த போதிலும் திணைக்களத்தால் பேணப்பட்ட கட்டுப்பாட்டுக் கணக்கின் பிரகாரம் அந்த மீதி ரூபா 19,442,325 ஆக இருந்தது. அதன் படி ரூபா 19,040 தொகையான வேறுபாடு வெளிப்படுத்தப்பட்டது.

(iv) 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு திணைக்களத்திலிருந்து வெளியே மாற்றலாகிச் சென்ற 96 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 356,718 கூட்டுத்தொகையிலிருந்து 2014 திசெம்பர் 08 ஆந் திகதி வரையில் ஒரு உத்தியோகத்தரிடமிருந்து ரூபா 770 தொகை மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. எஞ்சிய ரூபா 355,948 தொகை 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பாக தாபனவிதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 1.6 ஆம் பிரிவு மற்றும் 2004 ஒக்தோபர் 24 ஆந் திகதிய 118 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(v) 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ஓய்வு பெற்ற 78 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடவேண்டிய ரூபா 1,171,302 தொகையிலிருந்து 2014 திசெம்பர் 08 ஆந் திகதி வரையில் 04 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 535,240 தொகை மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. எஞ்சிய 74 உத்தியோகத்தர்களிடமிருந்தும் அறவிடவேண்டிய ரூபா 636,062 கூட்டுத்தொகை தொடர்பாக தாபனவிதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.2.4 ஆம்

4.2.5 ஆம் பிரிவுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(vi) 1999 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் மரணமடைந்த 07 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடவேண்டிய கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 544,786 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 397,366 தொகையான கடன் மீதி 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக முன்கொண்டு வரப்பட்டிருந்தது. இது தொடர்பாக தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.4 ஆம் பிரிவின் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(vii) 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு வேலை இடைநிறுத்தப்பட்ட 15 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 736,234 கூட்டுத்தொகையான கடன் மீதியை அறவிடுவதற்கு தவறியிருந்தது.

(viii) சேவையைக் கைவிட்டுச் சென்ற 15 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 1,051,474 கூட்டுத்தொகையான கடன் மீதி தொடர்பாக தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.5 மற்றும் 4.6 ஆம் பிரிவுகளின் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) முற்பணக் கணக்கு நடவடிக்கைகள் பூர்த்திசெய்யப்பட்டு மூடப்பபட்டமை

-------------------------------------------------------------------------------------------------------------------

7000/0/0/0300/0003 ஆம் விடய இலக்க முற்பணக் கணக்கு நடவடிக்கைகள் பூர்த்திசெய்து மூடப்பட்டு 21 வருடங்கள் கடந்திருந்த போதிலும் ரூபா 339,769,709 கூட்டுத்தொகையான அறவிடவேண்டிய மீதியும், ரூபா 509,651,145 கூட்டுத்தொகையான தீர்க்கப்படவேண்டிய மீதியும் ரூபா 169,870,060 கூட்டுப்பெறுமதியான முடிவுறுத்தப்படாத சொத்துக்களும் காணப்பட்டன.

பின்வரும் பிரதான கணக்காய்வு அவதானிப்புக்கள் காரணமாக கொடுக்கல் வாங்கல்களை தீர்த்து மூடப்பட்ட முற்பணக் கணக்குகள் தொடர்பாக அபிப்பிராயமொன்றைத் தெரிவிக்க முடியாதுள்ளது.

(i) மேலதிக அடிப்படையில் முன்னாள் கூட்டுறவு அமைச்சிற்கு வழங்கப்பட்ட வாகனத்திற்காக ரூபா 600,000 தொகை 2009 யூன் 05 ஆந் திகதி கிடைத்திருந்த போதிலும் அந்த சொத்தின் பெறுமதி

மற்றும் அதற்குரிய திரண்ட பெறுமானத்தேய்வு ஏற்பாடுகள் என்பவற்றை கணக்குகளிலிருந்து அகற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) கடற்படைக்கு கையளிக்கப்பட்ட மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 4,000,000 தொகையான பூஸ்ஸ களஞ்சியத் தொகுதியின் கிரயம் மற்றும் தளபாட உபகரணங்களின் கைதவிர்ப்புக் கணக்கில் செலவு வைக்கப்பட்ட ரூபா 174,445 தொகையான கிரயம் இனங்காணப்பட்டு கணக்குகளிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்காதிருந்தமை இதற்கு முன்னர் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டதன் பின்னர் அது தொடர்பாக திறைசேரிக்கு அறிவித்து எஞ்சிய நடவடிக்கைகளை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததாக 2009 பெப்ரவரி 17 ஆந் திகதிய ஐஏ/408/14 ஆம் இலக்க பதில் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அதன் பிரகாரம் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட பொறுப்புக்கள் தீர்த்தல் கூற்றில் காண்பிக்கப்பட்ட சொத்துக்களை அகற்றும் 03 கணக்குகளின் கூட்டுத்தொகை ரூபா 27,446,023 ஆன செலவு மீதி தொடர்பாக அதற்குரிய கிரயம் மற்றும் திரண்ட பெறுமானத்தேய்வு இனங்கண்டு சீராக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) இந்த முற்பணக்கணக்கு 2005 சனவரி முதல் கணக்கு நடவடிக்கைகள் பூர்த்திசெய்யப்பட்டு மூடப்பட்டுக் காணப்பட்டதுடன் அத்திகதியில் உள்ளவாறு காணப்பட்ட தீர்க்கப்படாத கடன் மீதி ரூபா 3,772,135 தொகை மற்றும் 1985 ஆம் ஆண்டு முதல் 2004 ஆம் ஆண்டு வரையான காலத்தில் ஏற்பட்ட தொழிற்படு நட்டமான ரூபா 4,612,880,682 தொகை என்பவற்றை பதிவழிப்பதற்கு 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(v) 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நடைமுறைச் சொத்துக்களில் உள்ளடக்கப்பட்ட ரூபா 48,216,458 தொகையான இருப்பு நிலுவைக் கடன்பட்டோர் மீதியில் 2012 ஆம் ஆண்டின் போது மீதிகளை முன்கொண்டுவரப்படும் போது ஏற்பட்ட ரூபா 65,425 தொகையான வேறுபாடு மீளாய்வாண்டின் போதும் மாற்றமின்றிக் காணப்பட்ட காரணத்தால் இருப்பு நிலுவைக் கடன்பட்டோர் மீதி ரூபா 65,425 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(vi) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட பட்டோலையின்படி, ஆண்டின் இறுதியின் போது கூட்டுறவுக் கடன்மீதி ரூபா 200,061,968 ஆக இருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களில் அது ரூபா 199,141,138 ஆகக் காண்பிக்கப்பட்ட காரணத்தால் ரூபா 915,830 தொகையான வேறுபாடு காணப்பட்டது.

(vii) உணவுத் திணைக்களத்தால் வெளி நிறுவனங்களுக்கு வாடகைக்கு வழங்கப்பட்ட 63 களஞ்சியங்களிலிருந்து 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அறவிடவேண்டியிருந்த நிலுவை களஞ்சிய வாடகை ரூபா 69,765,511 ஆகும். அதில் 23 களஞ்சியங்கள் இதுவரையில் மீளக் கையேற்கப்பட்டிருந்த போதிலும் அவர்களிடமிருந்து அறவிடவேண்டியிருந்த நிலுவை வாடகையான ரூபா 31,636,229 தொகை 2014 செப்தெம்பர் 10 ஆந் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(viii) 2002 மற்றும் 2003 ஆம் ஆண்டுகளின் போது ரூபா 1,072,198 பெறுமதியான 3 மோட்டார் வாகனங்கள் கமநல அபிவிருத்தி அமைச்சிற்கும் முன்னாள் கூட்டுறவு அமைச்சிற்கும் கையளிக்கப்பட்டிருந்தன. அவ்வாறு கையளித்து 11 வருடங்கள் கடந்த போதிலும் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் கையளிக்கப்பட்ட பெறுமதியை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ix) 10 நிறுவனங்களுக்கும் நபர்களுக்கும் குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்ட கட்டிடத்திற்காக 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அறவிடவேண்டியிருந்த நிலுவை மின்சாரம் மற்றும் நீர்க் கட்டணங்கள் ரூபா 2,527,004 கூட்டுத்தொகையாக இருந்தது.

(x) 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட ரூபா 338,697,511 தொகையான கடன்பட்டோர் மீதிகளை அறவீடு செய்தல் மிகவும் நலிவான நிலையில் காணப்பட்டது. இது தொடர்பாக பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

* 22 மாவட்டங்களுக்குரிய 179 பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அரிசி, மா, சீனி, உணவு முத்திரை மற்றும் மண்ணெண்ணெய் முத்திரை கடன் அடிப்படையில் வழங்கப்பட்டமையின் காரணமாக கூட்டுறவுச்

சங்கங்களிடமிருந்து 2013 சனவரி 01 ஆந் திகதியில் உள்ளவாறு அறவிடவேண்டியிருந்த கடன்தொகை நிதிக்கூற்றுக்களின் படி ரூபா 199,366,138 தொகையாக இருந்ததுடன் மீளாய்வாண்டின் போது அத் தொகையில் ரூபா 220,000 தொகை மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. கடன் அறவீடு 0.09 சதவீத அளவாக இருந்தமையால் கடன் அறவிடுதல் நலிவான நிலையில் காணப்பட்டமை உறுதிப்படுத்தப்பட்டது.

* 2013 சனவரி 01 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 48,216,459 தொகையான இருப்பு நிலுவை கடன்பட்டோர் மீதியில் ரூபா 135,176 தொகை மாத்திரம் மீளாய்வாண்டின் போது அறவிடப்பட்டிருந்ததுடன் கடன் அறவீடு செய்யும் அளவு 0.28 சதவீதமாக இருந்தது. 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மேலும் அறவிடுவதற்கிருந்த கடன் மீதி ரூபா 48,081,283 ஆகும்.

* 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 20 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாகக் கொண்டுவரப்படுகின்ற ஏனைய கடன்பட்டோர் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,992,362 ஆக இருந்ததுடன் அதில் மீளாய்வாண்டின் போது அதில் எதுவித கடன் மீதியும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

* அரசாங்க அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் கூட்டுத்தாபனங்களிலிருந்து 12 வருடங்கள் முதல் 19 வருடங்கள் வரையிலான காலப்பகுதி முதல் நிலுவையாக இருந்த கடன் மீதி ரூபா 89,203,828 ஆக இருந்ததுடன் அதில் மீளாய்வாண்டின் போது அதில் எந்தக் கடன் மீதியும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

* சேவையை விட்டுச் சென்ற/ வேலையிருந்து நீக்கிய/ வேலை இடைநிறுத்தம் செய்யப்பட்ட 74 களஞ்சியப் பொறுப்பாளர்களிடமிருந்து அறவிடவேண்டிய ரூபா 19,713,090 தொகையிலிருந்து மீளாய்வாண்டின் போது எதுவித தொகையும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

* தகவல்களைக் கண்டறிய முடியாத 53 களஞ்சியப் பொறுப்பாளர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 4,195,442

தொகை மற்றும் இடமாற்றலாகிச் சென்ற 40 களஞ்சியப் பொறுப்பாளர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 9,852,571 கூட்டுத்தொகையான இருப்பு நிலுவை மிகைக் கட்டண மீதியிலிருந்து எவ்வித பணத்தையும் அறவிடுவதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

* மிகைக்கட்டணம் விதிப்பதற்கு எதிராக உத்தியோகத்தரொருவரால் மேன் முறையீட்டு நீதிமன்றத்திற்கு தொடுக்கப்பட்ட வழக்கு இலக்கம் 1464/2002 இன் தீர்மானத்தின் படி ரூபா 2,382,580 தொகையான மிகைக்கட்டண விதிப்பு நீக்கப்பட்டதாக 2009 யூன் 24 ஆந் திகதிய உணவு ஆணையாளரின் கடிதம் மூலம் அறிவித்திருந்த போதிலும் அதனை நிதிக்கூற்றுக்களில் சீராக்குவதற்கோ அல்லது வெளிப்படுத்துவதற்கோ மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(xi) விரிவான பட்டோலை, மெய்மையாய்வுச் சபை அறிக்கை, காலப்பகுப்பாய்வு மற்றும் மீதி உறுதிப்படுத்தல் போன்ற தேவையான சான்றுகள் இன்மையினால் ரூபா 1,117,051,713 தொகைக்குரிய 13 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமானதாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

### 3.4 நல்லாளுகையும், கணக்களிப்பொறுப்பும்

### 3.4.1 உள்ளகக் கணக்காய்வு

திணைக்களத்தில் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று தாபிக்கப்பட்டிருக்கவில்லை. கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் திணைக்களத்திற்கான உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் அதன்படி கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

திணைக்களத்தின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2011 ஆம் ஆண்டின் போது ரூபா 18,292,550 தொகை செலவில் பழுதுபார்க்கப்பட்ட வெயாங்கொடை களஞ்சியசாலை வளவில் உள்ள 04 களஞ்சியங்களின் மொத்தக் களஞ்சிய இயலளவு 10,800 மெற்றிக் தொன்களாக இருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியாகிய 2013 ஒக்தோபர் 14 ஆந் திகதி வரையிலும் களஞ்சியத்திற்குள் 541 மெற்றிக் தொன்கள் மாத்திரமே களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது.

(ii) வெயாங்கொடை விஞ்ஞான ரீதியான களஞ்சியத்தில் 4,500 மெற்றிக்தொன் அரிசி களஞ்சியப்படுத்த முடியுமாக இருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியான 2013 ஒக்தோபர் 14 ஆந் திகதி வரையிலும் 618 மெற்றிக் தொன் அரிசி களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது. அது மொத்தக் களஞ்சிய இயலளவில் 14 சதவீத அளவாக இருந்தது.

(ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்

பொருள் மெய்மையாய்வு அறிக்கை 2014 மார்ச் 21 ஆந் திகதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த அறிக்கையில் சுட்டிக் காண்பிக்கப்பட்ட பாவனைக்கு எடுக்க முடியாத பொருட்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 858 இன் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) வெளித்தரப்பினருக்கு வழங்கப்பட்ட சொத்துக்கள்

திணைக்களத்திற்குச் சொந்தமான 153,275 மெற்றிக் தொன் இயலளவுடைய 46 களஞ்சியங்கள் வெளித்தரப்பினருக்கு முறையற்ற வகையில் வழங்கப்பட்டிருந்தது.

## 3.6 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றுடனான இணக்கமின்மைகள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையில் அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்து கீழே தரப்பட்டுள்ளன.

| **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு** | **இணக்கமின்மை** |
|---|---|
| ------------------------------------------------------ | ------------------------- |
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | |
| ------------------------------------------------------ | |
| (அ) நிதிப்பிரமாணம் 34 | 2012 யூலை 02 ஆந் திகதி திணைக்களத்தில் இரசாயனப் பொருள் பாவனையின்றி அரிசி இருப்பை பாதுகாப்பாக களஞ்சியப்படுத்தி வைப்பதற்காக சூழலியல் தாக்கங்களைக் கட்டுப்படுத்தும் விஞ்ஞான ரீதியான களஞ்சிய நிர்மாணத்தின் II ஆம் கட்டத்திற்கு ரூபா 188.6 மில்லியன் மதிப்பீட்டின் அடிப்படையில் செயற்திட்ட முன்மொழிவொன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் நிதிப்பிரமாணம் 34 இன் படி அதற்காக முறைப்படி நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) நிதிப்பிரமாணம் 373 | 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு திறைசேரிப் புத்தகங்களின் படி கட்டுநிதிக் கணக்கில் தீர்க்கப்பட வேண்டிய மீதியொன்று காணப்பட வில்லை. முற்பண நடவடிக்கைகள் பூர்த்திசெய்யப்பட்டு கணக்கை மூடிவிடுவதற்குரிய நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கட்டுநிதிக் கணக்கின் மீதி ரூபா 24,992,879 ஆக இருந்தது. இந்த மீதி முற்பண நடவடிக்கைகள் மூடப்பட்ட ஆரம்பம் முதல் கொண்டுவரப்படுகின்ற மீதியானமையால் அதனை இனங்காண்பதற்கு 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்க வில்லை. |

| | | |
|---|---|---|
| (இ) | நிதிப்பிரமாணம் 518(7)(ஆ) | முற்பண நடவடிக்கைகளை மூடிவிடுவதற்கு உரிய கணக்குகளில் முன்கொண்டுவருவதற்கு எஞ்சியிருக்கின்ற செயற்பாடுகள் மற்றும் கொடுக்கல் வாங்கல்களை தீர்த்து மூடிவிடுவிடுவதை பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற திகதி நிதிக்கூற்றுக்களில் முன்பக்கத்தில் குறிப்பிடப்பட வேண்டிய போதிலும் குறிப்பாக திகதியொன்று பிரசுரிக்க முடியாததாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. |
| (ஈ) | நிதிப்பிரமாணம் 756 | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் கூட்டுத்தொகை ரூபா 169,285,130 பெறுமதியான 4 நிலையான சொத்து விடயங்களுக்காக 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. |
| (உ) | நிதிப்பிரமாணம் 1645 | நாளாந்த ஓட்ட குறிப்புக்களின் படி, மாதாந்த ஒப்பீட்டு அறிக்கை தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் திணைக்களத்திற்குச் சொந்தமான வாகனங்கள் எவை தொடர்பாகவும் அவ்வாறு பொழிப்பு தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. |

### 3.7 செயலாற்றல்

2013 இன் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் படி திணைக்களத்தின் செயல்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

பிரதான பணிகளுக்கு முரணான செயற்பாடுகள்

2008 ஆம் ஆண்டில் உணவு ஆணையாளர் திணைக்களம் 100,000 மெற்றிக் தொன் பாதுகாப்பு அரிசி இருப்பினை பேணிச் செல்லும் நோக்கத்தில் மீள ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும், அதற்குப் புறம்பாக திணைக்களத்திற்குச் சொந்தமான களஞ்சியங்களிலிருந்து 89 சதவீதம் ஏனைய நிறுவனங்களுக்கு வாடகை அடிப்படையிலும் வாடகை அறவிடப்படாமலும் வழங்கப்பட்டிருந்தன.

## 3.8 வங்கிக் கணக்கிச் செயற்பாடுகளின் குறைபாடு

**சீராக்கப்பட வேண்டிய மீதி**

-திணைக்களத்தால் 2013 திசெம்பர் மாதத்திற்காகத் தயாரிக்கப்பட்ட வங்கிக் கணக்கிணக்கக் கூற்றில் காணப்படுகின்ற சீராக்கங்கள் தொடர்பான பகுப்பாய்வின் படி, 03 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 1,303,065 தொகையான தேறாத வைப்புக்கள் மற்றும் கொடுப்பனவிற்காகச் சமர்ப்பிக்கப்படாத ரூபா 1,300,065 தொகையான காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தமை வெளிப்படுத்தப்பட்டது.

## 3.9 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

திருகோணமலை தானியகம வீடமைப்புத் தொகுதியில் இருந்த 352 வீடுகள், வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை மூலம் 1982 ஆம் ஆண்டில் உணவு ஆணையாளர் திணைக்களத்திற்கு கையேற்கப்பட்டிருந்தது. இருந்த போதிலும் திணைக்களத்தால் இந்த வீடமைப்புக் கம்பனியின் ஊழியர்களுக்கும், அரச மற்றும் தனியார் துறை ஊழியர்களுக்கும் வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது. அதில் 33 வீடுகள் மீளக் கையளிக்கப்படாமல் உப வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தன. பொது நிருவாக அமைச்சின் செயலாளரால் 1969 இன் 07 ஆம் இலக்க அரச வீடுகள் அதிகாரச்சட்டத்தின் 6 ஆவது பிரிவின் அதிகாரங்களின் பிரகாரம் உணவுத் திணைக்களத்திற்குரிய அரசாங்கக் கட்டிடங்களின் உரித்தை மீளக் கையேற்கும் அதிகாரம் உணவு ஆணையாளருக்கு கையளிக்கப்பட்டிருந்தது. இந்த நிலத்தின் உரித்து இது வரை உணவு ஆணையாளருக்கு கையளிக்கப்படாமையின் காரணமாக அனுமதியற்ற குடியிருப்பாளர்களை அகற்றுவதற்கு முடியாதிருந்தது.

## 3.10 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட சில கொடுக்கல் வாங்கல்கள் முறையற்றதாக இருந்தன. அவதானிக்கப்பட்ட அவ்வாறான சந்தர்ப்பங்களில் சில கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) அரசாங்கக் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் நடைமுறைக்கு இணங்காமை

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) வெயாங்கொடை இயற்கையான காற்று செல்லக்கூடிய முறைமையுடன் களஞ்சிய நிர்மாணத்தின் கட்டம் II இற்காக

துறையில் அனுபவமுள்ள மதியுரை வழங்கும் நிறுவனம் அல்லது நபர்களிடமிருந்து கூறுவிலை கோரப்படாமல் ரூபா 1,390,157 தொகையால் பல்கலைகழக பேராசிரியரொருவர் மதியுரைச் சேவைக்காக நியமிக்கப்பட்டிருந்தார். உரிய மதியுரையாளரால் சாத்தியவள ஆய்வு, தெரிவு செய்யப்பட வேண்டிய தொழில்நுட்ப உபகரணங்கள், சேவை வசதிகளை வழங்குவோர் மற்றும் தகுதியான ஒப்பந்தக்காரர் தொடர்பாக உரிய சிபாரிசுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மேற்கூறப்பட்ட களஞ்சிய நிர்மாணத்திற்காக அரசாங்க கொள்வனவு வழிகாட்டிகளுக்கு முரணாக ரூபா 23,169,285 தொகைக்குரிய ஒப்பந்தம் அரசாங்க கூட்டுத்தாபனமொன்றிற்கு கையளிக்கப்பட்டிருந்தது. அந்தக் கூட்டுத்தாபனத்தால் அவ்விலைக்கே அந்த ஒப்பந்தம் தனியார் ஒப்பந்தக்காரரொருவருக்கு கையளிக்கப்பட்டிருந்தது. இந்த ஒப்பந்தத்தின் நிலைமை திருப்திகரமற்றதாக இருப்பதாக ஒப்பந்தத்தைப் பரிசோதனை செய்த மதியுரைக் கம்பனியால் அறிக்கையிடப்பட்டிருந்ததுடன் ஒப்பந்தத்திற்கான உடன்படிக்கை கையொப்பமிடப்பட்ட அரசாங்கக் கூட்டுத்தாபனத்திற்குப் பதிலாக CWE நிர்மாணக் கம்பனியின் உறுதிச்சிட்டை சமர்ப்பித்து உரிய பணம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

(iii) வெயாங்கொடை மாவட்ட தானியக் கூடத்தின் 04 களஞ்சியங்களை நவீனமயப்படுத்துவதற்காக ரூபா 18,292,550 பெறுமதியில் கொள்வனவு நடைமுறைகளுக்குப் புறம்பாக அரசாங்கக் கூட்டுத்தாபனத்திற்குக் கையளிக்கப்பட்டிருந்ததுடன் அந்தக் கூட்டுத்தாபனத்தால் இந்த ஒப்பந்தம் தனியார் ஒப்பந்தக்காரருக்குக் கையளிக்கப்பட்டிருந்த போதிலும் தொழில்நுட்ப உத்தியோகத்தரின் அறிக்கை பெறப்பட்டு எழுத்துமூலம் அந்த ஒப்பந்தத்தைக் கையளிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

--------------------------------------------------------------

விஞ்ஞான ரீதியான களஞ்சியத்தை நிர்மாணிக்கும் செயற்திட்டத்திற்காக ரூபா 188.6 மில்லியன் மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டிருந்ததுடன் அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் படி அதற்காக அமைச்சரவையின் அங்கீகாரமொன்று பெறப்படாதிருந்ததுடன் உரிய செயற்திட்டத்திற்காக சாத்தியவள ஆய்வும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. ரூபா 4.9 மில்லியன்

மதிப்பீட்டின் அடிப்படையில் நிர்மாணிக்கப்பட்ட விஞ்ஞான ரீதியான களஞ்சிய நிர்மாணம் கொள்வனவு நடைமுறைகளுக்குப் புறம்பாகத் தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரரொருவருக்கு கையளிக்கப்பட்டிருந்தது.

### 3.11 நட்டமும் இழப்பும்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட நட்டங்கள் மற்றும் இழப்புக்கள் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(i) கட்டம் I இன் கீழ் நிர்மாணிக்கப்பட்ட விஞ்ஞான ரீதியான களஞ்சியத்தின் மொத்தக் கொள்ளளவு 4,500 மெற்றிக்தொன் ஆக இருந்த போதிலும், 2013 ஆம் ஆண்டின் இறுதிவரையில் 652 மெற்றிக் தொன் மாத்திரம் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது. அந்த அரிசியைக் கொள்வனவு செய்தல் மற்றும் களஞ்சியப்படுத்துதலுக்காக ஏற்பட்ட செலவினத்தைவிட குறைந்த விலையில் அந்த அரிசி விற்பனை செய்யப்பட்டமையால் திணைக்களத்திற்கு ஏற்பட்ட நட்டம் ரூபா 7,467,112 ஆகும்.

(ii) வெயாங்கொடை மாவட்ட தானியக் கூடத்தில் ரூபா 4,500,000 தொகையில் தராசுப் பாலமொன்றை பொருத்துவதற்காக கம்பனியொன்றுக்குக் கையளிக்கப்பட்டிருந்ததுடன் அந்தப் பெறுமதியில் தராசினைப் பொருத்துவதற்கான சிவில் நிர்மாணங்களின் பெறுமதி ரூபா 1,205,357 ஆக இருந்தது. இந்த தராசுப் பாலத்தின் இருபக்கமும் கொங்கிரீட் இடப்பட்ட பள்ளமான பகுதி கீழிறங்கியிருந்ததுடன் அது கீழ் நோக்கி வெடித்துச் செல்வதனால் அதன் மேல் லொறிகள் பயணிக்கும் போது விரைவாக சேதத்திற்குள்ளாகின்றமை தொடர்பாக அதனை சரிசெய்யும் வகையில் சிவில் பொறியியலாளரின் அறிக்கை பெறப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே தராசுப் பாலத்தை மேவுகை செய்யும் வகையில் கூரையொன்று நிர்மாணிக்கப்படாமையால் உரிய பராமரிப்பன்றி தராசுப்பாலம் துருப்பிடித்துக் காணப்பட்டது.

### 3.12 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

விஞ்ஞான ரீதியான களஞ்சியம் பயன்பாட்டிற்குப் பொருத்தமான வகையில் தரமான அரிசியினை வழங்கும் நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும், விஞ்ஞான ரீதியான களஞ்சியத்தால் அரிசிக்குள் அந்துப் பூச்சிகள் பெருகியமையால் புகை பிடிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. அவ்வாறே களஞ்சியத்தின் சகல இயந்திரப் பகுதிகளும் அவ்வப்போது செயற்பாடற்ற நிலைக்குள்ளாகியமையின் காரணமாக பழுதுபார்க்கப்பட்டிருந்ததுடன் அந்தச் செயற்திட்டம் வெற்றியளிக்காத நிலைக்கு உள்ளாகியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 3.13 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 05 | 03 | 02 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 02 | - | 02 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 118 | 53 | 65 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 126 | 64 | 72 | 10 |
| (v) | ஏனையவை (அமைய/தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை) | - | 01 | - | 01 |
| | மொத்தம் | 251 | 121 | 141 | 11 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டின் இறுதி வரையில் 141 வெற்றிடங்களை நிரப்புவதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) ஆட்சேர்க்கப்பட்ட மேலதிக ஊழியர் எண்ணிக்கை தொடர்பாக முறையான அங்கீகாரமொன்றைப் பெற்றுக்கொள்வதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 4. தலைப்பு 301 – கூட்டுறவுத்துறை அபிவிருத்தி திணைக்களம்

### 4.1 கணக்காய்வின் நோக்கெல்லை

கூட்டுறவுத்துறை அபிவிருத்தி திணைக்களத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2014 ஒக்தோபர் 03 ஆம் திகதி திணைக்களத் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளினதும் கணக்கிணக்கக் கூற்றுக்களினதும் மீளாய்வு மற்றும் கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவு செவ்வை பார்த்தலின் அடிப்படையிலும் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்குக் கிடைப்பதற்குள்ள பதவியணியினர், ஏனைய மூலவளங்கள், நேரம் என்பவற்றிற்கமைய இயலுமானளவு விரிவானதோர் கணக்காய்வை உள்ளடக்கக் கூடியவாறு தயாரிக்கப்பட்டதாகும்.

### 4.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் சம்பந்தமாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்று என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பினது 148, 149, 150, 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு ஏற்ப பேணிவருதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாக சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான தவறான கூற்றுக்களைக் கொண்டிராத கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல், நியாயபூர்வமாகச் சமர்ப்பிக்கப்படுதலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாட்டைத் திட்டமிடலும், அமுல்படுத்தலும் பேணிவருதலும் இப்பொறுப்பில் உள்ளடங்கும்.

### 4.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் கூட்டுறவுத்துறை அபிவிருத்தி திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இந்த அறிக்கையின் (அ) முதல் (இ) வரையிலுமான பொதுவான அவதானிப்புக்கள் மற்றும் கீழேயுள்ள 4.4 முதல் 4.11

வரையிலான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமானதாக தயாரிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(அ) பாதீட்டு முரண்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) செலவின விடயமொன்றுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 100,000 தொகையான மொத்தத் தேறிய ஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ii) 02 செலவின விடயங்களுக்காக மிகையான நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டமை காரணமாக நிதியேற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய ஏற்பாட்டில் 12 சதவீதம் முதல் 28 சதவீதம் வரையான அளவைக் கொண்டிருந்தது.

(iii) நிதிப்பிரமாணம் 10 இன் படி பதவியணியினர் செலவின மதிப்பீடு தயாரிக்கும் போது இயலுமான வரையில் உள்ளபடியான தேவையை அடிப்படையாகக் கொண்டு செய்யப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கான சம்பளம் மற்றும் வேதன செலவின விடயத்தின் கீழ் நிதி ஏற்பாடு செய்யப்பட்ட ரூபா 21,780,000 தொகையான நிதி ஏற்பாட்டில் ரூபா 1,030,700 தொகை நிதிப்பிரமாணம் 66 இன் மூலம் ஏனைய செலவின விடயத்திற்கு மாற்றப்பட்டிருந்தது.

(iv) திணைக்களத்தால் நிதிப்பிரமாணம் 214 இன் படி பொறுப்புக்கள் பதிவேடொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பொது வைப்புக் கணக்கு

2 வருடங்களை விஞ்சிய ரூபா 8,117,167 தொகையான 75 வைப்புக்கள் தொடர்பில் நிதிப் பிரமாணம் 571 இன் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்று

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 30101 ஆம் விடய இலக்க முற்பணக் கணக்கு தொடர்பாக 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு இணக்கக்கூற்றின் படி

நிலுவையாக இருந்த கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,610,242 ஆக இருந்ததுடன் அந்த நிலுவை மீதிகளை அறவிடுவதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

(ii) கட்டுப்பாட்டுக் கணக்குகள் மற்றும் தனிப்பட்ட மீதி வகைப்படுத்தல் பொழிப்புக்களின் கூட்டுத்தொகைகளுக்கிடையே ரூபா 20,774 வேறுபாடு காணப்பட்டது. அந்த வேறுபாடுகளை சரிசெய்வதற்கு சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், மேலும் ரூபா 13,765 தொகையான வேறுபாடு ஏற்பட்டிருந்தது. இது தொடர்பாக கணக்காய்வு ஐயவினாக்களின் மூலமும் சுட்டிக்காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அப்பொறுப்புக்களை தீர்த்து வைப்பதற்கு 07 முதல் 27 வருடங்கள் வரையிலான காலம் எடுத்திருந்த போதிலும், அதனைத் தீர்த்து வைப்பதற்கும் இனங்காண முடியாத வேறுபாடுகளை இனங்காண்பதற்கும் பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர்கள் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(iii) மீளாய்வாண்டின் ஏப்ரல் 01 ஆந் திகதி 41 உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 205,000 கூட்டுத்தொகையான விழா முற்பணத்தை அறவிடல், தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 3.7 ஆம் பிரிவிற்கு முரணாக 03 மாதகால தாமதத்தின் பின்னர் 2013 ஆகஸ்ட் மாதத்தின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக மீளாய்வாண்டின் போது அறவிட முடியுமாக இருந்த ரூபா 164,000 இலிருந்து ரூபா 102,500 தொகை மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது.

(iv) சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக் கூற்றின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு இடமாற்றலாகிச் சென்ற 22 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடவேண்டிய ரூபா 224,815 தொகையான கடன் மீதி தொடர்பாக 2004 ஒக்தோபர் 11 ஆந் திகதிய 118 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இந்த மீதிகளில் ரூபா 2,700 தொகை 5 வருடங்கள் முதல் 10 வருடங்கள் வரையிலும், ரூபா 215,547 தொகை 13 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்திலிருந்தும் கொண்டுவரப்படுகின்ற மீதியாகும்.

(v) 2013 திசெம்பர் 31 ஆந் திகதி ஓய்வுபெற்றுச் சென்ற 03 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடவேண்டிய ரூபா 662,019 தொகையான கடன் மீதிகள் தொடர்பாக தாபன விதிக்கோவையின்

XXIV ஆம் அத்தியாயத்தின் 4.2.4 மற்றும் 4.2.5 ஆம் பிரிவுகளின் பிரகாரம் ஓய்வூதியப் பணிக்கொடை செலுத்தும் போது அறவிடப்பட்டிருக்கவில்லை. அந்த மீதியில் ரூபா 548,788 தொகை 5 வருடங்கள் முதல் 13 வருடங்கள் வரையிலான கால இடைவெளியிலும், ரூபா 44,394 தொகை 13 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்திலிருந்தும் நிலுவையாகக் காணப்பட்டது.

(vi) 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு இடைநிறுத்தம் செய்யப்பட்ட 11 உத்தியோகத்தர்களிடமிருந்தும் சேவையை விட்டுச் சென்ற 10 உத்தியோகத்தர்களிடமிருந்தும் அறவிடவேண்டிய ரூபா 524,651 கூட்டுத்தொகையான மீதிகள் காணப்பட்டன. இந்த மீதி 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக கொண்டுவரப்படுகின்ற மீதியாகும். தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.5 மற்றும் 4.6 ஆம் பிரிவுகளின் பிரகாரம் இந்த மீதிகளை உரிய பிணையாளிகளிடமிருந்து அறவிடுவதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 4.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 4.4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

2010 மார்ச் 10 ஆந் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் 1.4.1 ஆம் பந்தியின் தினைக்களத்தால் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்காக திணைக்களத்தால் தயாரிக்கப்பட்ட வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் அதற்கு இணங்க தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.4.2 உள்ளகக் கணக்காய்வு

வரிசை அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் அதன் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டு அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்

2010 திசெம்பர் 17 ஆந் திகதிய பீஎப்/மெய்மையாய்வுச் சபை/01 ஆம் இலக்க அரசாங்க நிதிப்பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தினால் திருத்தப்பட்ட 2009 திசெம்பர் 09 ஆந் திகதிய 441 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் 2013

இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு அந்த அறிக்கை 2014 மார்ச் 15 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் திணைக்களத்தினால் அந்த மெய்மையாய்வு அறிக்கை 2014 ஏப்ரல் 02 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

**4.6 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமைகள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகள் என்பனவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்து கீழே தரப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | | |
| | நிதிப்பிரமாணம் 188(2) | 17,043 | பணத்தை வங்கியிலிடும் போது வங்கிக்கூற்றில் அப்பணம் சரியாக செலவில் பதியப்பட்டதா என பரீட்சித்துப் பார்ப்பதற்கு பொறுப்பான உத்தியோகத்தரால் சான்றுப்படுத்தப்படுத்த வேண்டிய போதிலும், 2010 ஆம் ஆண்டில் வைப்புச் செய்யப்பட்ட ரூபா 17,043 பெறுமதியான 02 காசோலைகள் தொடர்பாக அதன் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கை | | |
| | 2010 திசெம்பர் 07 ஆந் திகதிய 150 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 01 ஆம் பந்தி | 1,321,678 | சுற்றறிக்கையின் ஆலோசனையின் படி நடவடிக்கை எடுக்காது திணைக்களத்தின் 03 பழைய வாகனங்களைப் பழுதுபார்ப்பதற்காக |

ரூபா 1,321,678 தொகை செலவிடப்பட்டிருந்தது.

## 4.7 செயற்திட்டங்களை அமுலாக்குவதில் நலிவுகள்

---

செயற்திட்டங்களை ஆரம்பிக்காது கைவிடப்பட்டமை, செயற்திட்டங்களை பூர்த்திசெய்யாது கைவிடப்பட்டமை மற்றும் செயற்திட்டங்களின் தாமதம் தொடர்பான தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்கள் கீழ் காண்பிக்கப்படுகின்றன.

(அ) திணைக்களத்தால் 2010 ஆம் ஆண்டின் போது பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் 40 மெகா கோப் சிட்டி சுபிரி விற்பனை நிலையங்கள் ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 2014 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரையிலும் 14 விற்பனை நிலையங்கள் மாத்திரம் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. அதில் 02 கடைகள் 2014 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரையிலும் மூடப்பட்டிருந்தது.

எவ்வாறாயினும், ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்ட மேற்கூறப்பட்ட 40 மெகா கோப் சிட்டி சுபிரி விற்பனை நிலையங்களில் 12 பல்வேறு காரணங்களின் அடிப்படையில் ஆரம்பித்தல் நிறுத்தப்பட்டிருந்தது. அதன் படி அதில் 08 இற்கு திட்டம் தயாரிப்பதற்காக 2011 ஆம் ஆண்டின் போது செலவிடப்பட்ட ரூபா 1,656,462 தொகை செயற்பாடற்றிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது ரூபா 17 மில்லியன் மதிப்பீட்டின் கீழ் கூட்டுறவு பாவனைப் பிரிவை மேம்படுத்தும் பிரிவொன்றை திணைக்களத்தில் தாபிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அது பொருத்தமான சந்தைப்படுத்தல் ஆலோசனையானரொருவரை ஆட்சேர்ப்பதற்கு முடியாமையின் அடிப்படையில் அப்பிரிவை ஆரம்பிக்கும் நடவடிக்கை 2014 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், மேற்கூறப்பட்ட பதவிக்காக நபரொருவரைச் சேர்ப்பதற்காக பிரசுரிக்கப்பட்ட பத்திரிகை அறிவித்தல் மற்றும் நேர்முகப்பரீட்சைக்காக ரூபா 111,423 தொகை மீளாய்வாண்டின் போது திணைக்களத்தால் செலவிடப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டில் அமுல்படுத்த வேண்டியிருந்த பின்வரும் செயற்திட்டங்களும் நிகழ்ச்சித்திட்டங்களும் 2014 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரையிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(i) மூலதனப் பயன்பாடு தொடர்பான குழுவை நியமித்தல்

(ii) கூட்டுறவுச் சங்கம் கணக்காய்விற்குரிய திணைக்கள மட்டத்தில் கணக்கு குழுவை நடாத்துதல்

(iii) தொழில்முயற்சி அபிவிருத்திச் செயற்திட்டத்தை அமுல்படுத்துதல்

(iv) விவசாயிகள் கூட்டுறவுச் சங்கங்களை தாபித்தல்

**4.8 செயலாற்றல்**

**-----------------------**

2013 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் படி, செயல்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்துடன் செயற்படாமை

-----------------------------------------------------------------------------------------------

பின்வரும் சந்தர்ப்பங்களின் போது செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க செயற்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(அ) செயல்நடவடிக்கைத் திட்டத்தின் படி, 2012 ஆம் ஆண்டின் புள்ளிவிபர அறிக்கை அச்சிட்டு பகிர்ந்தளிக்கும் நடவடிக்கைகள் மீளாய்வாண்டின் போது பூர்த்திசெய்யப்பட வேண்டியிருந்த போதிலும் அந்த பகிர்ந்தளித்தல் நடவடிக்கைகள் 2014 யூன் மாதத்தின் போது பூர்த்தி செய்யப்பட்டிருந்தது.

(ஆ) செயல்நடவடிக்கைத் திட்டத்தின் படி, ஒவ்வொரு 02 மாதங்களுக்கும் ஒரு தடவை மாகாண ஆணையாளர்களின் ஒன்றுகூடல் நடாத்தப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது ரூபா 85,410 தொகை செலவில் அவ்வாறான 02 ஒன்றுகூடல்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன. அதன்படி மாகாண தொடர்பாடல் நடவடிக்கைகள் நலிவான நிலையில் காணப்பட்டது.

(இ) செயல்நடவடிக்கைத் திட்டத்தின் படி, 2012 இன் வருடாந்த செயலாற்றல் அறிக்கை மீளாய்வாண்டின் போது பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியான 2014 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரையிலும் 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளுக்கான அந்த அறிக்கைகள் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) அத்தியாவசிய பொருட்கள் சிலவற்றின் விலைகளை நிலையாக பேணிச் செல்லும் நோக்கத்தில் 2010 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட ஒன்றிணைந்த அத்தியவசிய பொருட்கள் கொள்வனவு செய்யும் சுழற்சி நிதியத்தின் நடவடிக்கைகளைப் பேணிச் செல்வதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 680.4 மில்லியன் நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. வருடாந்த

செயல்நடவடிக்கைத் திட்டத்தின்படி நிதியத்தின் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக தேசிய விலைக் குழுவின் மூலம் அத்தியாவசிய பொருட்களின் விலைகளைத் தீர்மானித்தல், மாகாண கூட்டுறவு சங்கத்திற்காக விலைகளை அறிவித்தல் மற்றும் அந்நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தல் மற்றும் செயற்பாடுகள் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 4.9 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

வரிசை அமைச்சால் மேற்கொள்ளப்பட வேண்டிய மாகாண கூட்டுறவு அமைச்சர்களினதும் செயலாளர்களினதும் மாநாட்டிற்காக அமைச்சால் ரூபா 1.5 மில்லியன் நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது ரூபா 279,038 தொகை திணைக்களத்தால் செலவிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2012 ஆம் ஆண்டின் போது நடாத்தப்படாத மேற்கூறப்பட்ட மாநாட்டின் ஆரம்ப நடவடிக்கைக்காக ரூபா 265,249 தொகை திணைக்களத்தால் செலவிடப்பட்டிருந்த போதிலும், அத்தொகை மீளளிப்புச் செய்ய முடியாதிருந்ததாக அமைச்சினால் அறிவிக்கப்பட்டிருந்தது.

## 4.10 தீர்வுகாணப்படாத கணக்காய்வுப் பந்திகள்

திணைக்களத்திற்குரிய கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வு பந்திகள் தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகள் பூர்த்திசெய்யப்படாத பந்திகளுடனான தொடர்பு கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையுடனான தொடர்பு | | தொடர்புடைய விடயம் |
|---|---|---|
| வருடம் | பந்தி இலக்கம் | |
| 2012 | 1.7 (iv) | கூட்டுறவுச் சங்கங்களில் கணக்காய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் |
| | 1.8(அ) | நுகர்வோர் சங்கத்திலிருந்து கடன் அறவிடல் |
| | 1.9 | சுழற்சி நிதியத்திலிருந்து கடன் வழங்குகின்ற மாகாண கூட்டுறவு ஆணையாளரிடமிருந்தும் |

ஏனைய நிறுவனங்களிலிருந்தும் உடன்படிக்கையின் படி அறவிடல்

**4.11 மனிதவள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 09 | 06 | 03 |
| (ii) | மூன்றாம் நிலை | 07 | 01 | 06 |
| (iii) | இரண்டாம் நிலை | 105 | 91 | 14 |
| (iv) | ஆரம்ப நிலை | 20 | 16 | 04 |
| | மொத்தம் | 141 | 114 | 27 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

மீளாய்வாண்டின் இறுதி வரையில் 27 வெற்றிடங்களை நிரப்புவதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**5. தலைப்பு 302 – கூட்டுறவுத்துறை பணியாளர் ஆணைக்குழு**

**5.1 கணக்காய்வின் நோக்கெல்லை**

கூட்டுறவுத்துறை பணியாளர் ஆணைக்குழுவின் 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2014 நவம்பர் 19 ஆம் திகதி ஆணைக்குழுவின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட

கணக்குகளினதும் இணக்கக் கூற்றுக்களினதும் மீளாய்வு மற்றும் கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவு செவ்வை பார்த்தலின் அடிப்படையிலும் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்குக் கிடைப்பதற்குள்ள பதவியணியினர், ஏனைய மூலவளங்கள், நேரம் என்பவற்றிற்கமைய இயலுமானளவு விரிவானதோர் கணக்காய்வை உள்ளடக்கக் கூடியவாறு தயாரிக்கப்பட்டதாகும்.

**5.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் சம்பந்தமாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்று என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பினது 148, 149, 150, 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு ஏற்ப பேணிவருதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாக சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான தவறான கூற்றுக்களைக் கொண்டிராத கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல், நியாயபூர்வமாகச் சமர்ப்பிக்கப்படுதலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாட்டைத் திட்டமிடலும், அமுல்படுத்தலும் பேணிவருதலும் இப்பொறுப்பில் உள்ளடங்கும்.

**5.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்**

2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் கூட்டுறவுத்துறை பணியாளர் ஆணைக்குழுவின் ஒதுக்கீட்டுக் கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இந்த அறிக்கையின் (அ) மற்றும் (ஆ) வரையிலுமான பொதுவான அவதானிப்புக்கள் மற்றும் கீழேயுள்ள 5.4 முதல் 5.10 வரையிலான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமானதாக தயாரிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(அ) பாதீட்டு முரண்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 06 செலவின விடயங்களுக்காக மிகையான நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டமை காரணமாக நிதியேற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்புக்கள் அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய ஏற்பாட்டில் 33 சதவீதம் முதல் 86 சதவீதம் வரையான அளவைக் கொண்டிருந்தது.

(ii) வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டில் போக்குவரத்து செலவின விடயத்திற்காக ரூபா 360,000 தொகையான நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது அந்த செலவின விடயத்திலிருந்து ரூபா 170,000 தொகை மூலதன செலவின விடயத்திற்கும் மீண்டெழும் செலவின விடயத்திற்கும் நிதிப்பிரமாணம் 66 இன் படி நிதி ஏற்பாடு மாற்றப்பட்டிருந்தது. அதன் படி ஆண்டின் இறுதி வரையிலும் அந்த செலவின விடயத்தின் கீழ் ரூபா 190,000 தொகையான நிதி ஏற்பாடு காணப்பட்ட போதும், அதில் எத்தொகையும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்று

---

அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கிற்குரிய திணைக்களத்தின் ஏடுகளின் படி ஆண்டின் இறுதி மீதி ரூபா 2,103,090 ஆக இருந்த போதிலும் திறைசேரிப் புத்தகங்களின் படி அது ரூபா 2,142,051 ஆக இருந்தது. அதன் படி ரூபா 38,961 தொகையான வேறுபாடு காணப்பட்ட போதும், நிதிப்பிரமாணம் 427 இன் படி அந்த வேறுபாடு திணைக்களப் புத்தகங்களுடனும் திறைசேரிப்புத்தகங்களுடனும் இணக்கஞ் செய்யப்பட்டிருக்கவில்லை.

## 5.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 5.4.1 வருடாந்த கொள்வனவுத் திட்டம்

2006 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் படி வருடாந்த கொள்வனவுத் திட்டம் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.4.2 உள்ளகக் கணக்காய்வு

கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் அதன் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டு அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

**வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்**

பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் படி, 14 பொருள் வகைகள் பாவனைக்கு எடுக்க முடியாமையினால் அவற்றை ஏலத்தில் விற்பனை செய்வதற்கு சிபாரிசு செய்யப்பட்டிருந்த போதிலும், 2014 யூன் 30 ஆந் திகதி வரையிலும் அதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.6 செயலாற்றல்

2013 இன் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின்படி ஆணைக்குழுவின் செயல்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான பணிகள்

ஆணைக்குழுவின் பிரதான பணிகள் போதியளவில் நிறைவேற்றப்படாதிருந்த சந்தர்ப்பங்களில் சில கீழே காண்பிக்கப்படுகின்றன.

(i) 1972 இன் 12 ஆம் இலக்க கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு அதிகாரச்சட்டத்தைத் திருத்துவதற்காக 2012 சனவரி 11 ஆந் திகதியும் 2012 ஒக்தோபர் 05 ஆந் திகதியும் குழு நியமிக்கப்பட்டிருந்த போதிலும், தயாரிக்கப்பட்ட வரைவு அதிகாரச்சட்டம் அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்று திருத்துவதற்கு 2014 யூன் 30 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) கூட்டுறவு ஊழியர்களுக்காக புதிய ஓய்வூதிய முறைமையொன்றை அறிமுகப்படுத்துதல் 2006 ஆம் ஆண்டின் உத்தேச பிரதான பணியாக இருந்த போதிலும் 2014 யூன் 30 ஆந் திகதி வரையிலும் அச்செயற்பாடுகளை அமுல்படுத்துவதற்கு ஆணைக்குழு தவறியிருந்தது.

(iii) கூட்டுறவு ஒழுக்காற்று நடைமுறைக் கோவை தயாரிப்பதற்காக ஐந்து பேர்களை உள்ளடக்கிய குழுவொன்று 2013 சனவரி 04 ஆந் திகதி நியமிக்கப்பட்டிருந்ததுடன் அதன் இறுதி அறிக்கை 2014 யூன் 30 ஆந் திகதி வரையிலும் தயாரிப்பதற்கு ஆணைக்குழு தவறியிருந்தது.

### 5.7 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

கூட்டுறவு ஒழுக்காற்று செயல் நடைமுறைக் கோவையின் வரைவினை அச்சிட்டு வெளியிடுவதற்காக ரூபா 500,000 தொகையான நிதி கூட்டுறவு தொழில்முயற்சியின் இயலளவு அபிவிருத்தி செயற்திட்டத்தின் மூலம் நிதியீட்டம் செய்யப்பட்டிருந்தது.

செலவிடல் தொடர்பான அறிக்கை உரிய செயற்திட்டத்திற்கு அனுப்பப்பட்டிராததுடன் அந்த செலவினம் தொடர்பான விபரம் ஆணைக்குழுவிடம் காணப்படவில்லை.

## 5.8 தீர்வு காணப்படாத கணக்காய்வுப் பந்திகள்

கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவிற்குரிய கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட பின்வரும் கணக்காய்வுப் பந்திகள் தொடர்பான பின்தொடர்நடவடிக்கைகள் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை.

| கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையுடனான தொடர்பு | | தொடர்புடைய விடயம் |
| --- | --- | --- |
| வருடம் | பந்தி இலக்கம் | |
| 2012 | 1.6 | 1972 இன் 12 ஆம் இலக்க கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு அதிகாரச்சட்டத்தின் திருத்தம் மற்றும் ஒய்வூதிய முறைமையை அமுல்படுத்தியமை |
| | 1.7(i)(ii) | ஊழியர் வெற்றிடங்கள் மற்றும் செயலாளர் பதவிக்காக நிரந்தர உத்தியோகத்தரை நியமிக்காமை |
| | 1.4.4 | உள்ளகக் கணக்காய்வு அறிக்கை சமர்ப்பிக்காமை |

## 5.9 முகாமைத்துவ நலிவுகள்

ஆணைக்குழுவிற்குச் சொந்தமான வாகனங்களின் ஓட்டக் குறிப்புக்கள், சம்பவக் குறிப்புப் புத்தகம் என்பன முறைப்படி பேணப்பட்டிருக்கவில்லை.

## 5.10 மனிதவள முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 03 | 01 | 02 |
| (ii) | இரண்டாம் நிலை | 14 | 11 | 03 |
| (iii) | ஆரம்ப நிலை | 06 | 02 | 04 |
| | மொத்தம் | 23 | 14 | 09 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் 09 வெற்றிடங்களை நிரப்புவதற்கு ஆணைக்குழு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) ஆணைக்குழுவின் செயலாளர் பதவிக்காக 2013 ஆம் ஆண்டு முதல் வரிசை அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளரொருவர் நியமிக்கப்பட்டிருந்ததுடன் 2008 ஆம் ஆண்டு முதல் 2014 யூன் 30 ஆந் திகதி வரையிலும் இந்தப் பதவிக்காக நிரந்தர செயலாளரொருவரை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.